நாள்: **16.04.2024**

**RLTOP. No. 2/2023**

**ம.சா.1**

**பெயர்: நூர்முகமது , த/பெ. அப்துல்கனி**

<u>**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :**</u>

மனு கட்டிடத்தின் புல எண் என்னவென்றால், எனக்கு நியாபகம் இல்லை. மனு கட்டிடம் எனக்கு சொந்தமானது. மேற்படி சொத்தானது எனது பாட்டியாரால் எனது பெயருக்கு செட்டில்மெண்ட் மூலம் எழுதிக் கொடுக்கப்பட்டது. சொத்திற்கு நகர நில உரிமை பதிவேடு நகல் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள TS No. அரசு புறம்போக்கு நிலம் என்றால் இல்லை. அதில் ஒரு பகுதி திருவாரூர் அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயிலுக்கு சொந்தமானது என்றால் சரிதான். எனது அனுபவத்தில் உள்ளது. அதன் காரணமாகத்தான் வருவாய் ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் இல்லை. 1980 முதல் மனு சொத்து எனது அனுபவத்திலும், உரிமையிலும் இருந்ததற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.2 ஆவணம் எதிர்மனுதாரரால் எழுதிக் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி ஆவணம் என்னால் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கும், எதிர்மனுதாரருக்கும் வாடகைதாரர் , உரிமையாளர் என்ற உறவுமுறை இல்லை என்றால் சரியல்ல. கடந்த 2021 முதல் 2023 வரையிலான காலத்திற்கு வாடகை பாக்கி ரூ.78,000/- உள்ளது என்று வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றாலும், எனக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே வாடகைதாரர், உரிமையாளர் என்ற உறவுமுறையே இல்லாத பொழுது, வாடகை பாக்கி இருப்பதாக சொல்வது ஏற்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. ம.சா.ஆ.7 ஆவணத்தில் ரசீது எண். 724 மற்றும் 725 ல் உள்ள கையொப்பம் இந்த

எதிர்மனுதாரர் உடையது அல்ல என்றால் அவருடைய பேரன் கையொப்பம் செய்துள்ளார். வழக்கிற்காக அவ்வாறு தயார் செய்துள்ளேன் என்றாலும், அதில் உள்ள கையொப்பம் எதிர்மனுதாரரின் பேரனுடையது அல்ல என்றாலும் சரியல்ல. மனு இடத்தில் கூரை வீடு இருந்ததா என்றால் இல்லை. ஓட்டு வீடு இருந்தது. கூரை வீடு இருந்து அது தீ விபத்தில் எரிந்து விட்டது என்றால் சரிதான். அது சம்மந்தமாக நான் எந்த புகாரும் கொடுக்கவில்லை. அதற்கான காரணம் என்னவென்றால், எதிர்மனுதாரர் தவறுதலாக எரிந்து விட்டது என்று என்னிடம் கூறியதால் நான் புகார் கொடுக்கவில்லை. உண்மையில் மனு இடம் எனக்கு சொந்தமானது அல்ல என்றாலும், எதிர்மனுதாரர் தான் அரசு புறம்போக்கு நிலத்தில் வசித்து வருகிறார் என்றாலும், அவர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றாலும், என்னுடைய இடமாக இருந்திருந்தால் நான் புகார் கொடுத்திருப்பேன் என்றாலும் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேண்டுகோளின்படி ஒத்தி வைக்கப்படுகிறது.**

ஒம் / - S. விஜய் ஆனந்த்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவாரூர்.